பக்கங்கள் - 06

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

மின்னிதழ்

# வலம்புரி

Valampurii



E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005
இல.44,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 17 திங்கட்கிழமை (31.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 163


# தடுப்பூசி ஏற்றும் பணி யாழில் ஆரம்பம்

### அமைச்சர் நாமல் பங்கேற்பு







(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தடுப்பூசி வழங் 02

## கோவிட்டால் இரு நாட்களில் 78 பேர் பலி

(கொழும்பு)

மேலும் 78 கொரோனா மரணங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கத் தக 02

## யாழில் நேற்று மட்டும் 2,948 பேருக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டது



(யாழ்ப்பாணம்)

***கோவிட் - 19 தடுப்பூசி மருந்து வழங்கல் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் நேற்று 2 ஆயிரத்து 948 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.***

இந்த எண்ணிக்கை, தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் மக்களின் எண்ணிக்கையில் 52 சதவீதமானோர் தடுப்பூசியை நேற்று பெற்றுள்ளனர் என வட மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், யாழ்ப்பாண மாவட்டத்தில் 83 கிராம அலுவலர் பிரிவுகளில் கோவிட் - 19 தடுப்பூசி மருந்தை இன்று முதல் வழங்குவதற்கு நடவடிக்கை 02

## வவுனியாவில் உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் சுகயீனம் காரணமாக உயிரிழந்த 02

## 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை பெறத் தகுதியானவர்களின் பட்டியல்

### ஜனாதிபதி செயலகத்தால் வெளியீடு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா பரவல் காரணமாக பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கும் நிலையில் வாழ்வாதார ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படவிருக்கின்றது.

குறித்த உதவித் 02

## யாழில் தடுப்பூசி வழங்கும் நிலையங்களை அதிகரியுங்கள்

### அமைச்சர் நாமல் உத்தரவு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள விளை 02

## உருத்திரபுரம் கூலாவடியில் வாள்வெட்டு வன்முறை

### 11 பேர் காயம்

(முறிகண்டி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உருத்திரபுரம் கூலாவடிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் 11 பேர் காயம் அடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் 02

## யாழ்.நாவற்குழிப் பகுதியில் குளவி கொட்டியதில் மூன்று பேர் மயக்கம்

### யாழ்.போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஆலயத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்த மூவர் குளவிக் 02

## 2,849 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனாவால் 02

## தடுப்பூசி வழங்கலில் வேறுபாடு கிடையாது

### சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

கொரோனா 02

## யாழில் கொரோனா தீவிரம் 11 சிறார்கள் உட்பட 84 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஆய்வுகூடங்கள் இரண்டிலும் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் யாழ்.மாவட்டத் 02

## ஜூன் இறுதிவரை பயணக் கட்டுப்பாடு?

### தீவிரமாக ஆராய்கிறது அரசு

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற் 02

## யாழில் தடுப்பூசி...

யாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பொது மக்களுக்கான கோவிட்-19 தடுப்பூசி வழங்கப்படும் நிலையங்களுக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட நாமல், உடனடியாக தடுப்பூசி வழங்கும் நிலையங்களினை அதிகரித்து மிகக் குறைந்த நாட்களில் இந்த 50 ஆயிரம் தடுப்பூசியினை வழங்கு வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சுகாதார அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (ஞா-18,33,101)

## 2,849...

நேற்றைய தினம் 2,849 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 183, 387 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## வேறுபாடு...

வைரஸின் பாதிப்பிலிருந்து நாட்டு மக்கள் அனைவரையும் காப்பாற்றுவதே அரசின் திட்டம். அதற்காகவே தடுப்பூசிகளைப் பல நாடுகளிலிருந்து கொள்வனவு செய்கின்றோம். தடுப்பூசி வழங்கல் நடவடிக்கையில் வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற வேறுபாடு கிடையாது" இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா தெரிவித்தார். (ஞா)

## குளவி கொட்டி...

கொட்டுக்கு இலக்காகி மயக்கமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நாவற்குழிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் நேற்றைய தினம் சிரமதானப் பணியில் சிலர் ஈடுபட்டிருந்தபோது , குளவிக்கூடு கலைந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களை துரத்திக் கொட்டியது.

அதில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி மூவர் மயக்கமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஞா-18,30,33)

## உருத்திரபுரம்...

நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீதியால் சென்ற ரக்டர் மாட்டுடன் மோதியதில் ஏற்பட்ட முரண்பாடு இவ்வாறு மோசமான நிலையை உருவாக்கியுள்ளது. இரண்டு தரப்புக்களுக்கு இடையிலான குழு முரண்பாடு இறுதியில் வாள்வெட்டில் முடிந்துள்ளது.

சம்பவத்தில் 11 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன் அவர்களில் இருவர் படுகாயம் அடைந்ததாகவும் அவர்கள் இருவரும் சிறுகாயங்களுக்குள்ளான ஏனைய 9 பேரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-100,316)

## 78 பேர்...

வல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 1441 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## 11 சிறார்கள் உட்...

திணைச் சேர்ந்த 84 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் உடுவிலைச் சேர்ந்த மூன்றரை வயதுக் குழந்தை உட்பட்ட 11 சிறார்களும் உள்ளடக்கம்.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த 27 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை யாழ்.பல்கலைக் கழகத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் 57 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஞா-18,33)

## 5 ஆயிரம் ரூபாய்...

தொகை பெறவுள்ளவர்களின் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் பணிப்பிற்கமைய உதவித் தொகை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கமைய ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாய் உதவித்திட்டம் பெறத் தகுதியுடைய பயனாளிகள் விபரம் வருமாறு,

1. நிரந்தர வருமானம் பெறும் அரச ஊழியர்கள் மற்றும் அதிக வருமானம் ஈட்டுகின்ற வர்க்கத்தினரை தவிர ஏனைய அனைத்து குடும்ப உறுப்பினர்கள்.
2. சமுர்த்தி பெறும் குடும்ப உறுப்பினர்கள்.
3. சமுர்த்திபெறத் தகுதி இருந்தும் இதுவரை சமுர்த்தி உணவு முத்திரை கிடைக்காது காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்கள்.
4. 70 வயதினைக் கடந்த மூத்தவர்கள்.
5. 70 வயது பூர்த்தியடைந்தும் இதுவரை மூத்தோர் கொடுப்பனவிற்கான முத்திரையினைப் பெறாதுகாத்திருப்புப் பட்டியலில் உள்ளவர்கள்.
6. மாற்றுத் திறனாளிகள்.
7. இதுவரை கொடுப்பனவினைப் பெறாது காத்திருப்பு பட்டியலில் உள்ள மாற்றுத்திறனாளிகள்.
8. PMA (மஞ்சள் நிற அட்டை) பெறுகின்றவர்களும் மற்றும் அதற்கு விண்ணப்பித்து காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்களும்.
9. சிறுநீரக பாதிப்பு போன்ற பாரிய நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியிருப்போர்.
10. ஒருவர் சமுர்த்தி பெறுகின்றவர் அல்லது சமுர்த்தி பெற தகுதியுடையவர், அத்துடன் அவர் மூத்தோர் கொடுப்பனவினைப் பெறுகின்றவர், அல்லது அதனை பெறத் தகுதியுடையவராயின் - அவர் மேற்படி இரண்டு வகைக்குட்பட்ட பெறுவனவைகளையும் (5000 + 5000/= 10,000/=) பெறுவதற்கு தகதி உடையவராவர்.

இந்த உதவி தொகையினை பெற தகுதியுடையோர் எவர் என்ற முழுமையான தகவல்களை மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில், கிராம சேவகர்கள் ஊடாக மக்கள் பெற முடியும்.

இந்த சேவையினை ஒருங்கிணைப்பதற்காக ஜனாதிபதி செயலகம் 24 மணி நேரமும் பொதுமக்களுக்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எனவே, இந்த சேவைக்கு பொறுப்பான அதிகாரிகளை பிரதேச செயலக மட்டங்களில் தொடர்பு கொண்டு இந்த கொடுப்பனவினை மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்றுள்ளது. (ஞா)

## உயிரிழந்த...

பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் சுகயீனம் காரணமாக அவரது வீட்டில் நேற்று முன்தினம் மரணமடைந்திருந்தார். அவரது சடலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று பீடித்துள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா அண்ணாநகரைச் சேர்ந்த 52 வயதான பெண்ணுக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா-299)

## ஜூன் இறுதிவரை...

காக தற்போது அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாட்டை ஜூன் மாத இறுதி வரை நீடிப்பதற்கு அரச உயர்மட்டம் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

7ஆம் திகதிவரை நீடிக்கப்பட்ட பயணத் தடை, அதனைத் தாண்டியும் நடைமுறையில் இருக்கலாம் என அரச உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் பயணத்தடை நீடிக்கப்படுமா? இல்லையா? என்ற அறிவிப்பு ஜூன் 5ஆம், 6ஆம் திகதிகளில் வெளியாகும் எனவும் கூறப்படுகின்றது. (ஞா)

## தடுப்பூசி ஏற்றும்...

கும் பணிகளை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேரில் பார்வையிட்டார். (ஞா-18,33,101,104)

## 2,948...

எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

"சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்பு பிரிவின் வழிகாட்டல்களுக்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இனங்காணப்பட்ட கோவிட் - 19 நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு 11 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளை சேர்ந்த 61 கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் 11 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா ஒரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக 11 கிராம அலுவலர் பிரிவுகளில் நேற்று கோவிட்-19 தடுப்பூசி வழங்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் இன்று முதல் மேலதிகமாக 22 கிராம அலுவலர் பிரிவுகளில் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றார். (ஞா-18,33,101)

# மரண அறிவித்தல்

மண்ணில் 29 - 12 - 1947



விண்ணில் 24 - 05 - 2021

## கிருஸ்ணபிள்ளை சின்னராஜா

**(முன்னாள் இலங்கை போக்குவரத்து சபை பணியாளர்)**

*ஆவரங்கால், சர்வோதய வீதியை பிறப்பிடமாகவும் சென்னை, நங்கை நல்லூர் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை சின்னராஜா கடந்த 24.05.2021 அன்று இயற்கை எய்தினார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - கைராசி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் சுகாசினி (கனடா), பிரதீபன் (கனடா), காலஞ்சென்ற வசந்தீபன், குமுதின் (Doctor - இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற வைரமுத்து மற்றும் தங்கராஜா, பூமலர், பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் கனகலிங்கம், காலஞ்சென்றவர்களான முத்தம்மா, கிருஸ்ணலீலா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.*

*அன்னாரின் நல்லடக்கம் 24.05.2021 அன்று சென்னை நங்கை நல்லூர் இந்தியாவில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றது.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

(ஞ)

077 923 5446

தகவல்:- பெறா மக்கள்
பிரசன்னா (அவுஸ்திரேலியா)
பிலோஜன் (பிரான்ஸ்)

முதலில் தூசியைக் கிளப்பி விடுகின்றோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகின்றோம். – பிஷப் பார்க்லி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்

கொரோனாத் தொற்றிலிருந்து விடுபடும் உபாயம் தெரியாமல் இலங்கை அரசு அந்தரிக்கின்றது.

தடைமருந்தேற்றும் பணி தொடர்ந்தாலும் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் கொரோனாத் தடை மருந்தேற்றி முடிக்க கணிசமான காலம் தேவைப்படும்.

அது தவிர, கொரோனாத் தடைமருந்தின் பக்கவிளைவுகள் என்னவாக இருக்குமோ என்ற ஏக்கமும் மக்களிடம் இருக்கவே செய்கிறது.

இந்நிலையில் கொரோனாத் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாப்பதாக இருந்தால், நாட்டை முடக்குவதுதான் ஒரே வழி என்ற கருத்தை சுகாதாரத் தரப்பு வலியுறுத்தி வருகிறது.

அந்த அடிப்படையில் எதிர்வரும் யூன் 7ஆம் திகதிவரை நாடு முழுமைக்குமான பயணத் தடை அமுலில் இருக்கும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு மேலும் நீடிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்புகளும் உண்டு.

நாடு முழுமைக்கும் பயணத் தடையை அமுல்படுத்தியுள்ள போதிலும் கொரோனாத் தொற்றின் வேகமும் உயிரிழப்பும் இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் வந்ததாகத் தெரியவில்லை.

இதற்கு மேலாக, பயணத் தடை காரணமாக சாதாரண மக்களின் அன்றாட ஜீவனோபாயம் கேள்விக்குரியதாகியுள்ளது.

நாளாந்தக் கூலி வேலைகளுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை, குடிசைக் கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபட முடியாத நிலைமை, வேலையிழப்பு என ஏகப்பட்ட பிரச்சினைகளை பொது மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

என்ன செய்வது கொடிய கொரோனாத் தொற்றில் இருந்து எங்களைப் பாதுகாப்பதற்கான ஒரே வழி பயணத் தடை என்ற அடிப்படையில், பொதுமக்கள் பொறுமை காக்கின்றனர்.

இருந்தும் பயணத் தடை காரணமாக குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வீடுகளில் தங்கியிருப்பதால், உள்வீட்டுக் கலவரங்கள் தாராளமாக நடப்பதாகவும் இதனால் காயப்படுபவர்கள் தினசரி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதுமான திடுக்கிடும் தகவல்களும் உண்டு.

இவற்றையெல்லாம் தொகுத்தும் வகுத்தும் நோக்கும்போது வள்ளுவன் கூறிய

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை
எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்

என்ற குறளே நினைவுக்கு வருகிறது.

ஆம், தமிழ் – சிங்கள புத்தாண்டு காலத்தில் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தாமலும் புகையிரதப் போக்குவரத்தை தாராளமாக்கியும் எங்கும் மக்கள் கூட்டம் நெருக்கமாக நிற்பதற்குரிய சூழலை ஏற்படுத்தி விட்டு,

இப்போது பயணத் தடை விதித்தும் நிலைமையை சுமுகமாக்க முடியவில்லை எனும் போது, வருமுன்னர் பாதுகாத்துக் கொள்ளாவிடில் நிலைமை எப்படியாகும் என்பதற்கு இதைவிட்ட உதாரணம் வேறுதேவையில்லை.

# அனுமதியின்றி திறக்கப்பட்ட வர்த்தக நிலையம் பொலிஸாரால் நேற்று பூட்டப்பட்டது

(குருமன்காடு)

வவுனியாவில் அனுமதியின்றி திறக்கப்பட்ட இரு வர்த்தக நிலையங்கள் பொலிஸாரால் நேற்று பூட்டப்பட்டன.

வவுனியா, சந்தை உள்வட்ட வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பயணக்கட்டுப்பாட்டு நேரத்தில் வர்த்தக நிலையத்தை திறந்து வியாபாரம் இடம் பெற்றுள்ளது. இங்கு பொது மக்கள் பொருட்களை பெற்றுச் செல்வது தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து, பிரதேச செயலகத்தினர் அங்கு சென்று பார்வையிட்டனர். இதன்போது அனுமதி பெறாது வியாபாரம் செய்தமை தெரியவந்தது.

இதனையடுத்து பிரதேச செயலாளரால் வவுனியா பொலிஸாருக்கு தெரி யப்படுத்தியதையடுத்து குறித்த வர்த்தக நிலையத்திற்கு வருகை தந்த பொலிஸார் வர்த்தக நிலையத்தினருக்கு கடும் எச்சரிக்கை வழங்கியதுடன், வர்த்தக நிலையத்தை பூட்டுமாறும்பு ணித்திருந்தனர்.

அத்துடன், மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதியில் உள்ள பிரபல சுப்பர் மார்கற் ஒன்றில் பயணக்கட்டுப்பாட்டு நேரத்தில் வீடு வீடாக சென்று பொருட்களை வழங்குவதற்கான அனுமதியைப் பெற்று, வர்த்தக நிலையத்தை திறந்து வியாபாரம் செய்வதாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து அங்கு சென்ற பிரதேச செயலாளர் குறித்த வர்த்தக நிலையத்த பூட்டுமாறு பணித்ததுடன், பயணக்கட்டுபாட்டு நேரத்தில் வீடுகளுக்கு சென்று பொருட்களை வழங்குவதற்காக பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட அனுமதியும் ரத்து செய்யப்பட்டுள்ளது.(4-6,250)

## இரத்தினபுரியில் விபத்து

■ 35 பேர் படுகாயம்
■ சிலர் கவலைக்கிடம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி - நிவித்திகல பகுதியில் இடம் பெற்ற விபத்தில் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேயிலைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் செல்லும் பேருந்தே நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் வத்துபிடிவல மற்றும் இரத்தினபுரி போதனா வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6)

## 1 ஆம் தர அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் வெளியானது

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் 2022 ஆம் ஆண்டில் 1ஆம் வகுப்பில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்ப படிவம், நேற்று வெளியிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பான மாதிரி விண்ணப்ப படிவம் www.moe.gov.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு கூறியுள்ளது.

2022 ஆம் ஆண்டில் தங்கள் குழந்தைகளை அரச பாடசாலைகளில் 1ஆம் வகுப்பில் சேர்க்க விரும்பிய பெற்றோர்கள், வெளியிடப்பட்டுள்ள மாதிரி படிவம் மற்றும் அறிவுறுத்தல்களின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபருக்கு, பதிவு தபால் ஊடாக அனுப்ப வேண்டும் என்று அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

குறித்த விண்ணப்ப படிவத்தை எதிர்வரும் ஜூன் 30, 2021 க்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (4-6)

## இந்தியாவில் குறைவடையும் கொரோனாத் தொற்று

(இந்தியா)

இந்தியாவில் கடந்த மூன்று வாரங்களில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பாதியாகக்குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது அலை உச்சத்தைத் தொட்ட மூன்று வாரங்களில் கணக்கிடப்பட்டதில் இந்த புள்ளிவிபரம் வெளியாகியுள்ளது.

முதல் அலை உச்சத்தில் இருந்து பாதியாகக் குறைய ஆறு வாரங்கள் எடுத்தது என்றும் இரண்டாவது அலை மூன்று வாரங்களுக்குள் பாதியாகக் குறைந்திருப்பது மருத்துவத்துறையினருக்கு நம்பிக்கையை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதன்படி நேற்று முன்தினம் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை இரண்டு இலட்சத்தை விடவும் குறைவாக காணப்படுகிறது.

எனினும் தினசரி மரணம் அடைந்தவர்கள் எண்ணிக்கை குறையவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(4-6)

## தேசிய பாதுகாப்பு விடயத்தில் அரசாங்கம் தோல்வி - ஜே.வி.பி

(கொழும்பு)

உலகிலுள்ள எந்தவொரு கப்பலானாலும் பிறிதொரு நாட்டின் கடற்பரப்பிற்குள் பிரவேசிக்க முன்னர் அது தொடர்பான சகல தகவல்களையும் குறித்த நாட்டுக்கு வழங்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டமாகும்.

எனவே இது குறித்து எமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் கூறுவது பொய்யாகும் என மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

கப்பல் தொடர்பில் தகவல்கள் எதுவும் தெரியாமல் எமது கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதற்கு கடற்படையினர் அனுமதி வழங்குவார்களா? மாறாக அனுமதி வழங்கினால் அது தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தலாகும்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பிரதான பொறுப்பிலிருந்து அரசாங்கம் முழுமையாக விலகியுள்ளது என்றும் ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது. (4-6)

## நினைவேந்தல் திகதி மாற்றம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் பொது நூலக எரிப்பின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை முன்னிட்டுத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் சூம் தொழில் நுட்பத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வின் திகதி, நேரம் மாற்றப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணியளவில் இடம் பெறும் எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அறிவித்துள்ளனர். (4-6,18)

# கொவிட் தீவிரமடைந்து விட்டது சுகாதார பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தற்போது அடையாளம் காணப்படும் கொவிட் தொற்றாளர்கள் போன்று அடுத்த வாரமும் காணப்பட்டால் நாட்டில் கடும் நெருக்கடி நிலைமை ஏற்படும் என சுகாதார பிரிவு, அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நாளாந்தம் இரண்டாயிரத்திற்கும் அதிகமான கோவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், 25, 30 ஆயிரம் நோயாளிகள் வரை சிகிச்சையளிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என சுகாதார துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொவிட்டின் நான்காவது அலை நாட்டில் வேகமாக பரவி வருகின்ற நிலையில் இந்த மரபணு வேகமாக பரவி வருகின்றது. நோயாளிகள் பலர் தீவிர நிலைமைக்குள்ளாகியுள்ள நிலையில் ஒட்சிஜன் உதவியுடன் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக சுகாதார பிரிவு அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டியுள்ளது.

நோயாளிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்தால், நூற்றுக்கு 10 வீதமான நோயாளர்கள் தீவிர நிலையில் இருப்பார்கள் என கணக்கிட முடியும் என சுகாதார பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலைமையை கருத்திற் கொண்டு நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க கூடிய அதி தீவிர சிகிச்சை பிரிவுகள், மாகாண மட்டத்தில் நிறுவுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது எனவும் தெரிவித்தார். (4-6)




## கொரோனாவால் தேரர் உயிரிழப்பு



(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான பத்தேகம சமித தேரர் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் காலமானார்.

கொரோனா தொற்றுக்குள்ளான பத்தேகம சமித தேரர் மாத்தறையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் தனது 68 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பௌத்த துறவியாக வரலாற்றில் பத்தேகம சமித தேரர் பதிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

# துறைமுகநகர சட்டமூலத்துடன் அதிகாரப்பகிர்வினை ஒப்பிட வேண்டாம்

## நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

(கொழும்பு)

**கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தினையும் தமிழர்களின் அதிகாரப்பகிர்வு கோரிக்கையையும் ஒப்பீடு செய்யமுடியாது. அதனை அடியொற்றிய தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் தர்க்கமானது பொருத்தமற்றது என்று நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**



தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்காக நீண்டகாலமாக கோரப்பட்டுவரும் அதிகாரப் பகிர்வினைச் செய்வதற்கு தயாரில்லாத அரசாங்கம், தற்போது சீனாவுக்கு விசேட அதிகாரங்களை வழங்கி தனியான நிருவாக அலகினை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விமர்சன ரீதியாக முன்வைத்துள்ள கருத்து தொடர்பில் நீதி அமைச்சர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு துறைமுக நகரமானது, பொருளாதார முதலீடுகளையே மையப்படுத்தியது. இதில் இன,மத,மொழி வேற்றுமை இல்லை. இங்கு சிறுபான்மை சமூகங்களினைச் சேர்ந்தவர்களும் முதலீடுகளைச் செய்யமுடியும். இது குறிப்பிட்ட ஒரு தரப்பினருக்கு என்று எங்கும் வகைப்படுத்தப்படவில்லை.

கொழும்பு துறைமுக நகரமானது, பொருளாதார மையம் என்ற வகிபாகத்தினையே எதிர்காலத்தில் வழங்கவுள்ளது. இதனால், நாட்டின் எதிர்கால பொருளாதார நிலைமைகள் சீராக பேணுவதே இலக்காக உள்ளது.

அவ்வாறிருக்கையில், அரசாங்க எதிர்ப்பு மனோநிலையில் இருந்து கொண்டு அனைத்து விடயங்களையும் பார்ப்பதை முதலில் கைவிட வேண்டும். இலங்கையர்களாக ஒன்றிணைந்து நாட்டை முன்கொண்டு செல்வது தொடர்பிலேயே சிந்தித்து செயற்பட வேண்டும் என தெரிவித்தார். (4-6)

# நிலைமை மோசமடைந்தால் பயணத் தடை தளர்வில் மாற்றங்கள் ஏற்படலாம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வாரம் நிலைமைகளை ஆராய்ந்து நிலைமைகள் மோசமாயின் 7ஆம் திகதி பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் தீர்மானத்தில் மாற்றங்கள் ஏற்படுத்த வாய்ப்புக்கள் உள்ளன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 7ஆம் திகதியின் பின்னரும் பயணக்கட்டுப்பாடுகளை நீடிக்க வேண்டும் என சுகாதா துறையினர் வலியுறுத்தி வரும் நிலையில் அதற்கான தீர்வுகள் தொடர்பில் தெரிவிக்கும்போதே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,


தொடர்ச்சியாக பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும் என சுகாதார துறையினர் வலியுறுத்தி வருகின்றனர். அதற்கமைய ஒரு சில முடிவுகள் எடுக்கப்பட்ட போதிலும் மக்களையும் கருத்திற் கொண்டு பயணக்கட்டுப்பாடு தளர்வுகளும் ஏற்படுத்தப்பட்டன.

எனினும் கடந்த 25ஆம் திகதி மக்கள் தமது தேவைகளுக்காக அவதிப்பட்ட செயற்பட்டனர். இதன் போது மக்களை குறைகூற நாம் விரும்பவில்லை. ஏனைய நாடுகள் போன்று அல்லாது எமது மக்கள் மிகவும் பொறுமையாக அர்ப்பணிப்புடன் எமக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றனர்.

அதனை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். எனினும் மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதையே நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

அவ்வப்போது தளர்வுகளை ஏற்படுத்தாது இரண்டு வாரங்கள் தொடர்ச்சியாக நாட்டினை முடக்க வேண்டும் என இறுதியாக கூடிய செயலணிக் கூட்டத்திலும் வைத்திய நிபுணர்கள் வலியுறுத்தினர். எனவே அவர்களின் ஆய்வுகள் தரவுகள் கோரிக்கைகளை கருத்திற்கொண்டு கடுமையான தீர்மானம் ஒன்றை எடுக்க நேர்ந்தது என தெரிவித்தார். (4-6)

# இந்தியா, இங்கிலாந்து கூட்டுத்திரிபு வைரஸ் வியட்நாமில் கண்டுபிடிப்பு



(வியட்நாம்)

வியட்நாம் நாட்டில் புதிய வகை வீரியம் கொண்ட வைரஸ் உருவாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் அதிவேகமாக பரவுவதாகவும், காற்றிலும் அது பரவக்கூடியது என்றும் வியட்நாம் சுகாதார அமைச்சர் நுயேன் தன்லாங் தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வைரஸ், இங்கிலாந்து வைரஸ் ஆகியவற்றின் கூட்டு கலவையாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துதார்.

வியட்நாமில் சிலருக்கு நோய் தொற்றிய நிலையில் அவர்களை குணப்படுத்துவது கடினமாக இருந்தது. அதை வைத்து ஆய்வு செய்த போது அது புதிய வகை வைரஸ் என்பது தெரியவந்தது.

இதுபற்றி அவர்கள் உலக சுகாதார நிறுவனத்துக்கு தகவல் அனுப்பி உள்ளனர். அது புதிய வைரஸ் என்பது உறுதி செய்யப்பட்டால் அதுபற்றிய அறிவிப்புகளை உலக சுகாதார நிறுவனம் வெளியிடும் உன அவர் தெரிவித்தார். (4-6)

## இணைய வசதியற்ற க.பொ.த

# சா/த மாணவர்கள் கல்வி பயில கல்வி அமைச்சு புதிய ஏற்பாடு




**(யாழ்ப்பாணம்)**

**இணைய வழியில் கற்பதற்கான தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லாத மாணவர்கள் சாதாரண தொலைபேசி ஊடாகக் கற்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.**

சாதாரண தொலைபேசியில் **1377** என்ற இலக்கத்தை அழுத்தி உரிய தொடர்பு மொழியை தெரிவு செய்து கொண்டு, திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணிவரை மாணவர்கள் தமக்குத் தேவையான பாட விளக்கங்களையும் ஐயங்களையும் கேட்டறிய முடியும் எனவும், இதற்காக தொலைபேசிக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இக்கற்றல் செயற்பாடுகள் இந்த வாரம்முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு, வீட்டிலிருந்து தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடரவே, **1377** இவ் விசேட தொலைபேசி சேவையை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு இவ்விசேட இலவச தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எந்தவொரு வலையமைப்பின் ஊடாகவும், **1377** எனும் இலக்கத்தை அழைப்பதன் மூலம் இந்த சேவையை பெறமுடியும். (4-6,60)

# உரிமை கோரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் யாராலும் உரிமை கோரப்படாத துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் வண்டிகள் நீண்ட காலமாக மோட்டார் வண்டித் தரிப்பிடத்தில் உள்ளன.

உரிமையாளர்கள் தகுந்த அடையாளம் காட்டி அதனை ஒரு வார காலத்திற்குள் (29.05.2021 - 05.06.2021) பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (4-6)

# பசுவை இறைச்சிக்காக வெட்டிய குழு கைது

(குப்பிழான்)

புங்குடுதீவு பகுதியில் பசுவொன்று இறைச்சிக்காக கடத்தப்பட்டுக் வெட்டிக் கொல்லப்பட்ட குற்றச்சாட்டில் அப்பகுதியைச் சேர்ந்த நபரொருவர் ஊர்காவற்துறைப் பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் அவரது வீட்டிலிருந்து நூற்றுக்கணக்கான கிராம் அளவுடைய கேரளாக் கஞ்சாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

குறித்த நபர் நீண்டகாலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் மேற்படி பசுவின் இறைச்சியை விற்பனை செய்வதற்கு உதவியிருந்த இரு நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன்கொல்லப்பட்ட பசுவின் உரிமையாளரின் சகோதரருக்குச் சொந்தமான பசுவொன்றும் சம்பவ இடத்திலிருந்து உயிரோடு மீட்கப்பட்டது. (4-6,18)

# 15 பேர் கைது

மன்னாரில் ட்ரோன் கமரா உதவியுடன் கொரோனா கட்டுப்பாட்டை மீறிய 15 பேரை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

மன்னாரிலுள்ள மைதானங்களில் இளைஞர்கள் கூடி விளையாடியமை மற்றும் வீதிகளில் கூடி நின்றமை ஆகியவை ட்ரோன் கமராவின் ஊடாக கண்காணிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த பகுதிக்கு உடனடி விஜயம் மேற்கொண்ட மன்னார் பொலிஸார், அவர்களை கைது செய்து, வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6,285)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்திருநாட்டில் வாழும் மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தெல்லிப்பளை கட்டுவன் அகில இலங்கை சபரிகிரி ஐயப்பசுவாமி தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளது.

விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ஐயப்ப தாஷக்குருக்கள் அவர்களின் அருளாசி உரையும் வேதபாராணமும் இடம்பெறவுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம் " நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (4-6)

# பயணத் தடை வேளை கஞ்சாவுடன் மூவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு விசுவமடு பகுதி மாணிக்கபுரத்தில் கஞ்சாவுடன் மூன்று பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் பதிவாகியுள்ளது

மாணிக்கபுரம் கிராமத்தில் கஞ்சாபாவனை இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த பகுதியில் சோதனை நடடிக்கையினை முன்னெடுத்துள்ளபோது காஞ்சா வைத்திருந்த மூவரை கைதுசெய்தனர்.

இவர்கள் மூவரிடம் இருந்து 230 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மூவரிடமும் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6,281)

# 58 லீட்டர் கசிப்புடன் மூவர் கைது



(தருமபுரம்)

தற்போது நாட்டில் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டு இருக்கும்வேளை வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாயனூர் பகுதி அழகாபுரி கிராமம் மற்றும் கல்லாறு போன்ற இடங்களில் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 3 பேர் பொலிஸாரல் கைது செய்யப்பட்டனர்

கைது செய்யப்பட்ட நபர்கள் மேலதிக விசாரணைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (4-6,316)

# கைக்குண்டு மீட்பு



(தருமபுரம்)

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குப்பட்ட தனியார்காணி ஒன்றில் காணி உரிமையாளர் துப்பரவு செய்யும் பணியிலிடுபட்ட போது நேற்றைய தினம் வெடிக்காத நிலையில் குண்டு ஒன்றினை இனங்காணப்பட்டது .

இவ் விடயம் தொடர்பாக அக்கராயான் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய நீதிமன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப்படையினரால் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர் . (4-6,316)

# முறையாக தடுப்பூசி செலுத்தியிருந்தால் அதிக மரணங்கள் பதிவாகியிருக்காது

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கோவிட்-19 வைரஸ் தடுப்பூசி 60 வயதிற்கு மேற்பட்டோருக்கும் கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் முதற்கட்டத்தில் முழுமையாக செலுத்தியிருந்தால் கோவிட் -19 தாக்கத்தினால் அதிக மரணங்கள் பதிவாகியிருக்காது. சுகாதார தரப்பினரதும் விசேட வைத்திய நிபுணர்களின் அறிவுறுத்தல்கள் புறக்கணிக்கப்படுகின்றமை கவலைக்குரியது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் தற்போது முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புதுவருட கோவிட் கொத்தணியை கட்டுப்படுத்த தற்போது காலம் தாழ்த்தப்பட்ட வகையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அவை செயற்படுத்தப்பட்டுள்ளன. புதுவருட காலத்தில் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களும் விசேட வைத்தியர்களின் அறிவுறுத்தல்களும் முறையாக செயற்படுத்தப்பட்டிருந்தால் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை தோற்றம் பெற்றிருக்காது.

கோவிட் -19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் விசேட பொறிமுறையினை பாராளுமன்றினை பிரதிநித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சி தலைவர்களின் ஆலோசனைகளை பெற்று வகுக்க வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்தையும் பிரதிநித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் தங்களின் பிரதேச நிலவரம் குறித்து அதிக அக்கறை கொள்ள பாராளுமன்றத்தின் ஊடாக சிறந்த திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் என கோவிட் முதலாம் அலைத் தாக்கத்தின்போது குறிப்பிட்டேன். இத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான தேவை கிடையாது என சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார் என தெரிவித்துள்ளார். (ஞா)

# தனிமைப்படுத்தப்பட்டிருந்த சிறுவன் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பு

## நயினாதீவில் 15 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)

சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த சிறுவன் தனிமைப்படுத்தல் நடைமுறைகளை மீறி மின்னொளியில் கிரிக்கெட் போட்டியில் விளையாடியதால் நயினாதீவில் 15 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்தவாரம் குறித்த சிறுவன் கொரோனா சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் சிறுவனுக்கு கடந்த வெள்ளிக்கிழமை கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சிறுவன் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றமை தெரியவந்ததையடுத்து அதிர்ச்சியடைந்த சுகாதாரத்துறை சிறுவனுடன் தொடர்பிலிருந்த 15 குடும்பங்களைத் தனிமைப்படுத்தியதுடன் மேலும் தொடர்பானவர்கள் குறித்து தகவல் சேகரித்து வருகின்றனர்.

மேலும் குறித்த சிறுவன் மற்றும் கூடி விளையாடிய அனைவர்மீதும் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு சுகாதாரத்துறை நடவடிக்கை எடுத்துவருகின்றது. (ஞா)

### வவுனியாவில்

# 4 சிறுவர்கள் உட்பட 18 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் 4 சிறுவர்கள் உட்பட 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

அதில், தோணிக்கல் பகுதியில் 2 வயது மற்றும் 9 வயது சிறுவர்கள் உட்பட 4 பேருக்கும் சிறிராமபுரம் பகுதியில் 3 வயது மற்றும் 8 வயது சிறுவர்கள் இருவருக்கும் ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள இஸ்லாமிய கலாசார மண்டபம் முன்பாகவுள்ள பிரபல பலசரக்கு வர்த்தக நிலையம் ஒன்றில் இருவருக்கும் தவசிகுளம் பகுதியில் ஒருவருக்கும் நவகமுக பகுதியில் ஒருவருக்கும் திருவேகம பகுதியில் ஒருவருக்கும் நெடுங்குளம் பகுதியில் ஒருவருக்கும் வவுனியா சிறைச்சாலை கைதி ஒருவருக்கும் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவருக்கும் தெற்கிலுப்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும் ஆச்சிபுரம் பகுதியில் ஒருவருக்கும் பெரியகோமரசன்குளம் பகுதியில் ஒருவருக்கும் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒருவருக்கும் என 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ஞா-250)

### ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்ட

# குற்றவாளிகளுக்கு தண்டனை உறுதி

## அமைச்சர் சரத் வீரசேகர அறிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புபட்ட பிரதான நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய சந்தேகநபர்கள் சகலருக்கும் எதிராக அடுத்த ஒரு சில வாரங்களில் சட்டமா அதிபரினால் வழக்குத் தொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இவ்வாறான திட்டமிடப்பட்ட தாக்குதலுடன் தொடர்புபட்ட நபர்களை கண்டறிவது இலகுவான காரியமல்ல. எம்மைப் பொறுத்தவரையில் சகல குற்றவாளிகளையும் தண்டிக்க வேண்டும். ஒரு சிலர் இந்த விசாரணைகளில் இருந்து தப்பிப்பது எதிர்காலத்தில் மீண்டும் சிக்கலாக அமையலாம். எவ்வாறு இருப்பினும் பிரதான குற்றவாளிகள் என 32 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த சில வாரங்களில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புபட்ட ஏனைய சந்தேகநபர்கள் மீது குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்யவுள்ளதாக சட்டமா அதிபர் எம்மிடம் தெரிவித்துள்ளார். குறைபாடுகள் உள்ள விசாரணை கோப்புகளில் சுமார் 75 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டு சட்டமா அதிபர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 25 சதவீத குறைபாடுகளும் பூர்த்தியான பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். விரைவில் இந்த நடவடிக்கைகள் பூர்த்தியாகும் என்றார். (ஞா)

### தெல்லிப்பழையில் மூதாட்டி கொலை

# 2 வருடங்களின் பின்பு சந்தேகநபர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் வீட்டில் தனித்திருந்த மூதாட்டி கொலை செய்யப்பட்டு, நகை மற்றும் பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவத்தில் இரண்டு ஆண்டுகளாக தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியில் வைத்து அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

25 வயதுடைய அவர் இரண்டு ஆண்டுகளாக புங்குடுதீவில் தலைமறைவாகியிருந்த நிலையில் மானிப்பாய் பகுதிக்கு வருகை தந்திருந்தவேளை காங்கேசன்துறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி சி.நிதர்சன் தலைமையிலான அணியினர் கைது செய்தனர்.

தெல்லிப்பழை மகாதனையை சேர்ந்த சுந்தரலிங்கம் கமலாதேவி (வயது -70) என்ற மூதாட்டி கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்ட நிலையில் 2019ஆம் ஆண்டு மே 6ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார்.

மூதாட்டி அணிந்திருந்த நகை மற்றும் வீட்டிலிருந்த பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன என்று உறவினர்கள் தெரிவித்திருந்தனர். சம்பவத்தையடுத்து 5 பேர் கைது செய்யப்பட்டனர். 6ஆவது சந்தேக நபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில் 6ஆவது சந்தேக நபர் 2 ஆண்டுகளின்பின் கைது செய்யப்பட்டுள்ளார். (ஞா-18,33)

# கொழும்பில் விற்கப்படபோகும் மேலும் 200 ஏக்கர் நிலப்பரப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி அதிர்ச்சி தகவல்

(கொழும்பு)

துறைமுக நகர திட்டத்திற்கு இணையாக கொழும்பு கோட்டை பகுதியில் மேலும் 200 ஏக்கர் நிலத்தை வெளிநாடுகளுக்கு விற்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல குற்றஞ்சாட்டினார்.

இதற்காக ஏற்கெனவே ஒரு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஞா)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2021 இல் வெளியிடப்பட்டது.